நிதீஷ் குமாரின் புதிய அரசின் மீது பிப்.10-இல் நம்பிக்கை வாக்கெடுப்பு

பாட்னா, ஜன.30: பிகாரில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் முதல்வராக பதவியேற்ற நிதீஷ் குமாரின் புதிய அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு பிப்ரவரி 10-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக அந்த மாநில சட்டப் பேரவை செயலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில், 'பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல்நாளில் (பிப்.10) சட்டப்பேரவையின் இரு அவைகளிலும் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் உரைக்குப் பின் அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

பிப்ரவரி 12-ஆம் தேதி மாநில பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு 12 நாள்களுக்கு இந்த கூட்டத்தொடர் நடைபெறுகிறது' என தெரிவிக்கப்பட்டது. அவைத் தலைவராக ராஷ்ட்ரீய ஜனதா தளத்தைச் சேர்ந்த அவாத் பிஹாரி செளதரி மீது தேசிய ஜனநாயக் கூட்டணி சார்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டும் அவர் தற்போது வரை பதவி விலகவில்லை. இதனால் நடக்கவிருக்கும் கூட்டத்தொடரில் ஆளுங்கட்சி- எதிர்க்கட்சி கூட்டணி கட்சிகளிடையே சலசலப்பு ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவைத் தலைவராக நியமிக்க பாஜகவைச் சேர்ந்த நந்த் கிஷோர் யாதவ், அமரேந்திர பிரதாப் சிங் ஆகியோர் பரிசீலனையில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. 'இந்தியா' கூட்டணியில் இருந்து விலகி பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்த நிதீஷ் குமார் 9- ஆவது முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பதவியேற்றது குறிப்பிடத்தக்கது.

தேர்வுத்தாள் கசிவு: ரயில்வே வாரிய முன்னாள் தலைவருக்கு 5 ஆண்டுகள் சிறை

புது தில்லி, ஜன.30: கடந்த 2010-ஆம் நடைபெற்ற ரயில்வே தேர்வின் வினாத்தாளை சட்டவிரோதமாக முன்கூட்டியே கசியவிட்ட மும்பை ரயில்வே தேர்வு வாரிய முன்னாள் தலைவர் சத்தேந்திர மோகன் சர்மா உள்பட 10 பேருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி ஹைதராபாத் சிபிஐ சிறப்பு நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளிகளான சர்மா மற்றும் அஸ்ஸான்- மங்களூர் ரயில் மேம்பாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஜகந்நாத முக்கு தலா ரூ.1.75 லட்சமும், ரூ.1.31 லட்சமும் முறையே அபராதமாக விதிக்கப்பட்டது. குற்றவாளிகள் 10 பேருக்கும் மொத்தமாக சேர்த்து ரூ.7.87 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக சிபிஐ செய்தித்தொடர்பாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ரயில் ஓட்டுநர், ரயில் நிலைய அதிகாரிகளுக்கான தேர்வுத்தாளை சட்டவிரோதமாக முன்னரே வெளியிட்ட விவகாரத்தில் ஜகந்நாதம் ஷரீன் குமார், அசோக் குமார், ஜகந்நாதம் ரமேஷ், ஜகந்நாதம் திருப்பத்தைய்யா, மண்டாரம்மா சேஷு" நாராயண மூர்த்தி, விவேக் பரத்வாஜ், ஸ்ருஜன் ஜகந்நாதம் மற்றும் விஜய் ஷங்கர் ஆகியோர் இடைத்தரகர்களாக செயல்பட்டனர். அவர்கள் தேர்வுக்குத் தயாராகி வந்த சுமார் 193 மாணவர்களிடம் ரூ.5,000 முதல் ரூ.1,50,000 வரை வசூல் செய்துள்ளனர்.

அவர்களை கோவா, ஷோலாபூர், நாகபுரி ஆகிய பகுதிகளுக்கு அழைத்துச் சென்று தேர்வுத்தாளில் உள்ள வினாக்களுக்கு பதிலளிக்கும் வகையில் பயிற்சி வழங்கியுள்ளனர்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான இடங்களில் சிபிஐ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டதில் சுமார் ரூ.36.90 லட்சம் வரை கைப்பற்றப்பட்டது. இதில், 10 பேருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி ஹைதராபாத் சிபிஐ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது' என்றார்.

சீனாவின் ஆதிக்கத்தைக் கண்டு அஞ்சக் கூடாது

அமைச்சர் ஜெய்சங்கர்

மும்பை, ஜன.30: அண்டை நாடுகளில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருவதை மறுக்கமுடியாது என்றும் இதுபோன்ற போட்டி மனப்பான்மை அரசியலை கண்டு நாம் அஞ்சக்கூடாது என்றும் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

மகாராஷ்டிர மாநிலம், மும்பை ஐஐடியில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ஜெய்சங்கர் பங்கேற்றார். அப்போது கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு அவர் அளித்த பதில், 'சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதை மறுக்க முடியாது. ஆனால் இதை இந்தியாவின் தோல்வியாக கருதக்கூடாது. இதுபோன்ற போட்டி அரசியலைக் கண்டு நாம் அஞ்சக்கூடாது. சர்வதேச அரசியல் என்பது போட்டிகளுடன் கூடிய சாதாரியமான விளையாட்டு. அதில் ஒவ்வொருவரும் சிறப்பான பங்களிப்பை வழங்குவர். நாமும் நம்முடைய சிறப்பை வழங்குவோம்.

மிகப்பெரிய பொருளாதாரமான சீனா, அதன் வளங்களை பயன்படுத்தி அதற்கேற்றவாறு அரசியலை மாற்றி அமைக்க முயலும். அதுகுறித்து நாம் புகார் அளிக்கத் தேவையில்லை. இந்தப் போட்டியை வரவேற்று எங்களாலும் போட்டியிட முடியும் என்று நாம் கூற வேண்டும்.

செங்கடல் தாக்குதல்: செங்கடல் பகுதியில் 10 பாதுகாப்பு கப்பல்களை இந்திய கடற்படை நிலைநிறுத்தியுள்ளது. அண்டை நாடுகளுக்கு தீமை நடக்கின்ற போது நாம் கண்டுகொள்ளாமல் இருந்தால் பொறுப்புடைய நாடாக இந்தியா அங்கீகரிக்கப்படாது.

'இருதேசத் தீர்வு': இஸ்ரேலைப் போலவே பாலஸ்தீனத்தையும் தனி தேசமாக அங்கீகரிக்கும் 'இரு தேசத் தீர்வின்' மூலமே அந்தப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இதுவே இந்தியா மட்டுமின்றி பல்வேறு நாடுகளின் நிலைப்பாடாக உள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக் குழுவினர் நடத்தியது பயங்கரவாத தாக்குதலாகும். இதற்கு பதிலடித் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மதித்து நடப்பதுடன் குடிமக்கள் உயிரிழப்பையும் தடுக்க வேண்டும் என்றார்.

வரலாறு-புவியியலை மாற்ற இயலாது: மாலத்தீவிலிருந்து இந்திய ராணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என அந்நாடு அண்மையில் அறிவித்தது. இது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், 'அண்டை நாடுகள் ஒருவரையொருவர் சார்ந்து இருக்கத்தான் வேண்டியுள்ளது. வரலாறு மற்றும் புவியியல் ஆகிய இரண்டும் சக்தி வாய்ந்த காரணிகளாகும். அவற்றிலிருந்து விடுபட்டுச் செல்வற்கு வழியில்லை' என்றார்.

பாகிஸ்தானியர்களை மீட்ட இந்திய கடற்படை: சோமாலியாவின் கிழக்கு கடற்கரை பகுதி, ஏடன் வளைகுடா பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் இருந்த இந்திய கடற்படையின் போர்க் கப்பலான 'ஐஎன்எஸ் சுமித்ரா' சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஈரான் நாட்டு மீன்பிடி கப்பலை திங்கள்கிழமை மீட்டது.

இந்நிலையில் 11 சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 'அல் நேம்மி' என்ற மற்றொரு ஈரான் நாட்டு கொடி பொருத்தப்பட்ட மீன்பிடி கப்பலில் பயணித்த 19 பாகிஸ்தானியர்களையும் 'ஐஎன்எஸ் சுமித்ரா' செவ்வாய்க்கிழமை மீட்டது.

இதுதொடர்பாக இந்திய கடற்படையின் செய்தித்தொடர்பாளர் கமாண்டர் விவேக் மாத்வால் கூறுகையில், 'கடந்த 36 மணி நேரத்தில் தனது விடாமுயற்சி மற்றும் உறுதியான நிலைபாட்டால் சிறைபிடிக்கப்பட்ட இரண்டு மீன்பிடி கப்பல்களையும் அதில் பயணித்த 36 பேரையும் (17 ஈரானியர்கள் மற்றும் 19 பாகிஸ்தானியர்கள்) தெற்கு அரபிக்கடலில் கொச்சியிலிருந்து 850 கடல் மைல் தூரத்தில் ஐஎன்எஸ் சுமித்ரா மீட்டது.

இதன்மூலம் இந்திய பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்யும் இந்திய கடற்படையின் முயற்சிகள் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது என்றார்.

மாநிலங்களவைத் தேர்தல்: கர்நாடகத்தில் சோனியா காந்தி போட்டி?

டி.கே.சிவகுமார் பதில்

பெங்களூரு, ஜன. 30: மாநிலங்களவைத் தேர்தலில் கர்நாடகத்தில் இருந்து காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி போட்டியிடவில்லை என அக்கட்சியின் மாநிலத் தலைவரும் துணை முதல்வருமான டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

1999-ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பெல்லாரி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட சோனியா காந்தி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் சுஷ்மா ஸ்வராஜைவிட கூடுதல் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றிருந்தார். இந்நிலையில், அடுத்த சில மாதங்களில் நடைபெற இருக்கும் மக்களவைத் தேர்தலில் சோனியா காந்தி முதுமை காரணமாக போட்டியிட வாய்ப்பில்லை என்பதால், மாநிலங்களவைத் தேர்தலில் கர்நாடகத்தில் இருந்து போட்டியிடுவார் என்று செய்திகள் வெளியாகின.

இதுகுறித்த கேள்விக்கு பெங்களூரில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் பதிலளிக்கையில், 'இந்தத் தகவல்கள் அனைத்தும் பொய்யானவை.

கர்நாடகத்தில் இருந்து மாநிலங்களவைத் தேர்தலில் சோனியா காந்தி போட்டியிடுவது குறித்து விவாதிக்கவில்லை.

மண்டியா மாவட்டத்தின் கெரகோடு கிராமத்தில் 108 அடி உயரக் கம்பத்தில் இருந்து ஹனுமன் காவிக்கொடியை இறக்கப்பட்ட விவகாரத்தை பெரிதுபடுத்தி அமைதியை சீர்குலைத்து, சட்டம் - ஒழுங்கை கெடுக்க பாஜக, மஜத ஆகிய கட்சிகள் முயற்சிக்கின்றன.

தென்கர்நாடகத்தின் பழைய மைசூரு பகுதியில் அனைத்து ஜாதிகள், மதங்களைச் சேர்ந்த மக்கள் அமைதியுடனும், சகோதரத்துவ மனப்பான்மையுடனும் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது தேசியக்கொடி, கன்னடக்கொடி தவிர வேறு கொடிகளைப் பயன்படுத்த மாட்டோம் என்று உள்ளூர் அமைப்பு பிரமாணப் பத்திரம் அளித்து, 108 அடி உயர கொடிக் கம்பத்தை அமைக்க அனுமதி பெற்றுள்ளது' என்றார்.

மகா கூட்டணிக்கு நிதீஷ் தேவையில்லை: ராகுல்

பூர்னியா, ஜன.30: பிகாரில் காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம், இடதுசாரிகளின் மகா கூட்டணிக்கு பிகார் முதல்வர் நிதீஷ் குமார் தேவையில்லை என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்தார்.

ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை நீதி நடைப்பயணம் பிகார் மாநிலம், பூர்னியா மாவட்டத்துக்கு செவ்வாய்க்கிழமை வந்தடைந்தது. அங்கு பேசிய ராகுல், 'பாஜகவுக்கு எதிரான நிலைப்பாட்டை தாக்குபிடிக்க முடியாமல் இந்தியா கூட்டணியை விட்டு நிதீஷ் குமார் விலகி உள்ளார். பிகாரில் மகா கூட்டணியின் சமூக நீதிக்கான போராட்டம் தொடரும். இதற்கு நிதீஷ் குமார் தேவையில்லை.

நாட்டில் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் ஆகியோருக்கு அனைத்து துறைகளிலும் பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை.

நாடு முழுவதும் தலித், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் எத்தனை சதவீதம் உள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ள ஜாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

மணிப்பூரில் உள்நாட்டு போர் சூழல் நிலவி வருகிறது. ஆனால், பிரதமர் மோடி இன்றுவரையில் அங்கு செல்லவில்லை' என்றார்.

2023-இல் இந்தியர்களுக்கு 14 லட்சம் விசா

அமெரிக்கா தகவல்

புது தில்லி, ஜன.30: கடந்த ஆண்டு இந்தியர்களுக்கு 14 லட்சம் நுழைவு இசைவு (விசா) வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 60 சதவீதம் அதிகமாகும்.

இதுதொடர்பாக தில்லியில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த ஆண்டு இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகமும், துணைத் தூதரகங்களும் இந்தியர்களுக்கு 14 லட்சம் விசாக்களை வழங்கியுள்ளன.

அந்த ஆண்டு இந்தியாவில் அனைத்து வகை அமெரிக்க விசாக்களுக்கான தேவை முன்னெப்போதும் இல்லாத அளவில் இருந்தது. கடந்த 2022-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு விசாக்களுக்கான விண்ணப்பங்கள் 60 சதவீதம் அதிகம். இதன் மூலம், உலகில் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்கும் 10 பேரில் ஒருவர் இந்தியராக உள்ளார்.

கடந்த ஆண்டு வணிகம் மற்றும் சுற்றுலா காராணங்களுக்கு வழங்கப்படும் பி1, பி2 விசாக்களுக்கான விண்ணப்பங்கள் 7 லட்சத்தை கடந்தன. காத்திருப்பு நேரம் குறைந்துள்ளது: விசா நடைமுறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அலுவலர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக தூதரங்களில் விசா பெறுவதற்கான நேர்காணல் காத்திருப்பு நேரம், இந்தியாவில் 1,000 நாள்களில் இருந்து 250 நாள்களாக குறைந்துள்ளது.

சென்னையில் அதிக மாணவர் விசாக்கள்: கடந்த ஆண்டு இந்தியாவில் 1.40 லட்சத்துக்கும் அதிகமான மாணவர் விசாக்களை அமெரிக்கா வழங்கியுள்ளது. இது வேறு எந்தவொரு நாட்டிற்கு இந்த அளவுக்கு மாணவர் விசா வழங்கப்படவில்லை.

இதன் மூலம், இந்தியாவில் மாணவர் விசாக்களை அமெரிக்கா வழங்கியதில் தொடர்ந்து 3-ஆவது ஆண்டாக சாதனைப் படைக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிர மாநிலம் மும்பை, தில்லி, தெலங்கானா மாநிலம் ஹைதாராபாத், சென்னை ஆகிய நகரங்களில் அதிக மாணவர் விசாக்கள் வழங்கப்படுகின்றன.

இதன் விளைவாக, அமெரிக்காவில் படிக்கும் சர்வதேச பட்டதாரி மாணவர்களில் மிக அதிக எண்ணிக்கையில் இந்திய மாணவர்கள் உள்ளனர். மேலும் அமெரிக்காவில் படிக்கும் 10 லட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு மாணவர்களில், இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 33 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளது.

3.80 லட்சம் வேலைவாய்ப்பு விசாக்கள்: வழக்கம்போல வேலைவாய்ப்புக்கான அமெரிக்க விசாக்களுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு இந்தியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு 3.80 லட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்பு விசாக்களை அமெரிக்கா வழங்கியது.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
திருவள்ளூர் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு
ஒருங்கிணைந்த ஒப்படைக்க வருவாய் மானியம் (SCPAR) 2023 - 2024 மற்றும் 15வது நிதிக்குழு மானியம் (மாவட்ட ஊராட்சி/வட்டார ஊராட்சி) ஆகிய திட்டங்களின் கீழ் எரிவாயு மின் தகன மேடை அமைத்தல்

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களால் திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அயப்பாக்கம் ஊராட்சியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்க வருவாய் மானியம் (SCPAR)2023-2024 மற்றும் 15வது நிதிக்குழு மானியம் (மாவட்ட ஊராட்சி/வட்டார ஊராட்சி) ஆகிய திட்டங்களின் கீழ் 1 எரிவாயு மின்தகன மேடை அமைத்திட மின் - ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான மின் - ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 31.01.2024 முதல் 19.02.2024 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கியமான நாள் மற்றும் நேரம் :
மின் - ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 19.02.2024 பிற்பகல் 03.00 மணி
மின் - ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 19.02.2024 பிற்பகல் 04.00 மணி

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
செ.ம.தொ.இ / 534 /ஒப்பந்தப்புள்ளி/2024 வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் (இ) அம்பத்தூர்

பிரித்வி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிட்.
பதிவு & மேற்பார்வை அலுவலகம்: கதவு எண்: 1-55, 'ராஜா ப்ராசாத்', 4வது தளம், விங்-1, மஸ்ஜித் பண்டா சாலை, கொண்டாபூர், ஹைதராபாத்-84. CIN: U67120TG2007PLC053327 தொலைபேசி எண்: 040-41413333, தொலைநகல்-040-41413301 மின்னஞ்சல்: cc@paras.org.in இணையம்: www.paras.org.in

M/s சிவகுமார் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிட்., கணக்கில் உள்ள அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள்-2002-இன் விதி 9(1), கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள்-2002-இன் விதி 8(6)-க்கான வழித்துணையின் கீழ்

இந்த அறிவிப்பு மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர், அடமானதாரர்கள் & ஜாமீன்தாரர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், ... M/s. சிவகுமார் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிட்., ... திரு DS.சிவகுமார் - கடன்தாரர் மற்றும் திரு. LK.சங்கர், திரு.R.ஜெயகுமார் திரு.S. வைத்தியநாதன் திரு. A. புருஷோத்தமன் மற்றும் திருமதி. R. கஸ்தூரி- ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் - ஆகியோரிடமிருந்து 31.12.2023 அன்றுள்ளபடி ஒரே தொகுப்பாக, நிலுவையாக உள்ள தொகை ரூ. 18,88,35,499/- ... "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 06.03.2024 (ஆஃதாவது புதன்கிழமை) அன்று விற்பனை செய்யப்படும்.

சொத்து விபரம்: குடியிருப்பு காலி நிலம் அமையப்பெற்ற நகர் சர்வே எண் 2433, வார்டு எண் 7, ப்ளாக் எண் 45, தண்டபாணி நகர், வில்வராயநத்தம், கடலூர் மாவட்டம், பரப்பளவு: 2155 சதுர அடி, பாத்தியதாரர்- திருமதி. R. கஸ்தூரி எல்லைகளாவன, ... மேற்கு: 24 அடி லே அவுட் சாலை

பட்டியல் சொத்து விற்பனையை "இணையவழி ஏல விற்பனை" முறையில் சேவை வழங்குநரின் வலைதளம் https://www.bankeauctions.com மூலம் நடத்துவதற்கு அதிகாரப்பூர்வ அலுவலர் மின் ஏல அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

குறைந்தபட்ச கேட்பு விலை	டெபாசிட் தொகை	விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்	மின் ஏல நாள்	ஏல நேரம்	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை
ரூ. 63,00,000/- (ரூபாய் அறுபத்து மூன்று லட்சம் மட்டும்)	ரூ. 6,30,000/- (ரூபாய் ஆறு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்)	மாலை 4.00 மணி 05.03.2024 நாளன்று அல்லது அதற்கு முன்பு	06.03.2024 (புதன்கிழமை)	முற்பகல் 11.30 மணி முதல் மதியம் 1 மணி வரை*	ரூ. 1.00 லட்சம்

* மின் ஏல நேரம் - ஒவ்வொரு முறையும் தன்னியல்பாக 5 நிமிடம் நேர நீட்டிக்கப்படும் ...

இந்த சொத்து தொடர்பான வில்லங்கங்கள் / விவகாரங்களின் பட்டியல்: -இல்லை-

சேவை வழங்குநரின் இணையதளமான https://www.bankeauctions.com மூலம் ... சேவை வழங்குநரின் முகவரி மற்றும் விபரங்கள்: M/s C1 இந்தியா பிரைவேட் லிட்., தொடர்பு நபர், திரு தரணி கிருஷ்ணா தொடர்பு எண் 99481 82222 மின்னஞ்சல் முகவரி: (1) dharani.p@c1india.com and (2) andhra@c1india.com

கணக்கு எண்	100631100000229
நடுபெற்றுக் கடன் அளித்தவர்	M/s. பிரித்வி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிடெட்.
வங்கி	யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா
கிளை	மிட் கார்ப்பரேட் கிளை, பஞ்சகுட்டா, ஹைதராபாத்
IFSC குறியீடு	UBIN0577901

திரு V உதய பாஸ்கர ராவ், அதிகாரப்பூர்வ அலுவலர் & உதவி. துணைத் தலைவர். தொடர்புக்கு: அலைபேசி எண். 9640993395. அலுவலக தொலைபேசி எண் : 040-41413305, மின்னஞ்சல் முகவரி: udayabhaskar@paras.org.in

சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம் - 17.02.2024 முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை.

நாள்: 29.01.2024 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்: ஹைதராபாத் பிரித்வி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிடெட்

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் - இணைய வழி - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மின்னனு ஒப்பந்தப்புள்ளி
அறிவிப்பு எண் : ந.க. எண். 240/இ4/நாள் 25.01.2024 ஒப்பந்தவகை : LUMPSUM CONTRACT

வ.எண்	பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு	முன் வைப்புத் தொகை	பணி முடிக்க வேண்டிய காலம்
1.	திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் வடகிழக்குப் பகுதியில் புற்றுக்கோயில் மண்டபத்தினை கருங்கல் திருப்பணியாக செய்தல்	ரூ. 129.92 இலட்சம்	ரூ. 75,000/- இணை ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு பெயரில் ஆன்லைனில் மட்டுமே செலுத்த வேண்டும்	12 மாதங்கள்

முக்கிய நாட்கள் :- 1. இணைய வழியில் இலவசமாக ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்ய : 01.02.2024 முதல் 16.02.2024 பிற்பகல் 02.00 மணிவரை 2. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை தரவேற்றம் செய்ய : 16.02.2024 பிற்பகல் 02.00 மணிவரை 3. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் : 16.02.2024 பிற்பகல் 04.00 மணிக்கு; (https://tntenders.gov.in)
செ.ம.தொ.இ/521/ஒப்பந்தப்புள்ளி/2024

Chola Enter a better life
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
நிறுவன அலுவலகம்: சோழா கிரெஸ்ட், சூப்பர் B, C54 & C55, 4, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032, தமிழ்நாடு
கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("மேற்கூறிய சட்டம்") மற்றும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 ("மேற்கூறிய விதிகள்") கீழ்

கடன்தாரர்/கள் மற்றும் சஹ்டுக் கடன்தாரர்/கள் பெயர் மற்றும் முகவரி	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத்தொகை	சொத்து / கடனீட்டுச் சொத்து விவரம்
கடன் கணக்கு எண்(கள்): X0HLKAC00003586764 & X0HLKAC00002643832. 1. ராஜேஸ்வரி P. 2. ஜெயலக்ஷ்மி K. இருவரது குடியிருப்பு முகவரி: எண் 5, ரத்னா நகர், தெள்ளாறு, வந்தவாசி - 604 406, தமிழ்நாடு. இன்னொரு முகவரி: சர்வே எண் 191/1C2 P எண் 5, ரத்னா நகர், தெள்ளாறு, வந்தவாசி NA, வந்தவாசி, தமிழ்நாடு - 604 406. 3. பொன்னம்பலம் S. குடியிருப்பு முகவரி: எண் 176, மாரியம்மன் தெரு, தெய்யார் அஞ்சல், மீரநல்லூர், திருவண்ணாமலை, தமிழ்நாடு - 604 406.	29.01.2024 - 24.01.2024 நாளன்று ரூ.20,26,106/- (ரூபாய் இருபது இலட்சத்து இருபத் தாறாயிரத்து நூற்று ஆறு மட்டும்)	இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய காலி மனை இடம். மனை எண் 5. அளவு: கிழக்கு மேற்காக - 20 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்கும் பக்கம் - 55½ அடி, மேற்கும் பக்கம் - 59 அடி, மொத்தம் 1147½ சதுர அடி. சர்வே எண் 191/1, புதிய சர்வே எண் 191/1c, ரத்னா நகர், தெள்ளாறு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: குளம் தரிசு நிலம், தெற்கு: 23 அடி தெரு, கிழக்கு: மனை எண் 4, மேற்கு: மனை எண் 6. இவற்றுக்கிடையே உள்ள காலி மனை இடம், மனை எண் 5. அளவு: கிழக்கு மேற்காக - 20 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 55½ அடி, மேற்கும் பக்கம் - 59 அடி, மொத்தம் 1147½ சதுர அடி. இந்தச் சொத்து செய்யாறு பதிவு மாவட்டம், தெள்ளாறு சார்பதிவு மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டத்துக்கு உட்பட்டது.

இடம்: திருவண்ணாமலை, தமிழ்நாடு ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
நாள்: 29.01.2024 சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் சார்பில்

முக்கியத்துவம் பெற்ற கல்வி நிறுவனங்கள் தேசத்தின் கட்டமைப்பை பிரதிபலிக்க வேண்டும்

அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக விவகாரத்தில் மத்திய அரசு வாதம்

புது தில்லி, ஜன.30: 'அரசியல் சாசனப்படி, தேசிய முக்கியத்துவம் பெற்ற நிறுவனம் என்று அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் தேசத்தின் கட்டமைப்பைப் பிரதிபலிக்க வேண்டும்' என்று அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்துக்கு சிறுபான்மை கல்வி நிறுவன அந்தஸ்து அளிப்பது தொடர்பான வழக்கு விவாதத்தின்போது உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு கருத்து தெரிவித்தது.

உத்தர பிரதேச மாநிலம் அலிகாரில் அமைந்துள்ள அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் (ஏஎம்யு) சிறுபான்மை கல்வி நிறுவனமாக செயல்பட்டு வந்தது.

இந்த பல்கலைக்கழகம் மத்திய அரசு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட பின்னர், அதன் சிறுபான்மை நிறுவன அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து அந்த நிறுவனம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை கடந்த 1967-ஆம் ஆண்டு விசாரித்த உச்சநீதிமன்ற 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, சிறுபான்மை கல்வி நிறுவன அந்தஸ்து ரத்து செல்லும் என உத்தரவிட்டது.

எனினும், நாடாளுமன்றத்தில் கடந்த 1981-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக திருத்தச் சட்டம் மூலம், சிறுபான்மை கல்வி நிறுவன அந்தஸ்தை பல்கலைக்கழகம் மீண்டும் பெற்றது.

கடந்த 2006-ஆம் ஆண்டு ஜனவரியில் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக திருத்தச் சட்ட நடைமுறைகளை அலகாபாத் உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து பல்கலைக்கழகம் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன்னிலையில் தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது. வழக்கு செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு தரப்பில் எழுத்துபூர்வ பதிலை சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா சமர்ப்பித்தார். அதில், 'இந்த வழக்கில் தீர்வளிப்பதில் சமூக நீதி முக்கிய காரணியாக இருக்கும். ஏனெனில், இந்தப் பல்கலைக்கழகத்தில் எந்தவித இடஒதுக்கீடு நடைமுறையும் பின்பற்றப்படாமல், மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களில் 70 முதல் 80 சதவீதத்தினர் முஸ்லிம்கள். அரசியல் சாசனப்படி தேசிய முக்கியத்துவம்வாய்ந்த கல்வி நிறுவனமாக இந்தப் பல்கலைக்கழகம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேசத்தின் கட்டமைப்பை இந்த நிறுவனம் பிரதிபலிக்க வேண்டும். அவ்வாறு இன்றி, எந்தவித இடஒதுக்கீடு நடைமுறையையும் பின்பற்றாமல், பல்கலைக்கழகம் மாணவர் சேர்க்கையை நடத்தி வருகிறது.

அந்த வகையில், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் சமூக - பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவு மாணவர்களுக்கு எந்தவித இடஒதுக்கீடும் இந்தப் பல்கலைக்கழகத்தில் கிடையாது. அதே நேரம், மத அடிப்படையில் பொருளாதாரத்தில் மேம்பட்ட பிரிவு மாணவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது' என்று மத்திய அரசு குறிப்பிட்டது.

வழக்கு விசாரணையின்போது வாதிட்ட துஷார் மேத்தா, 'அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக சட்டம் 1920-இல் நடைமுறைக்கு வந்தது. அந்தக் கால கட்டத்தில் சிறுபான்மையினர் அல்லது சிறுபன்மையினர் உரிமைகள் என்ற கருத்தே கிடையாது. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 'சமத்துவம்' என்பதுதான் அரசமைப்புச் சட்டத்தின் ஆன்மாவாக இருந்து வருகிறது' என்று வாதிட்டார்.

இந்த வாதங்களை கேட்ட தலைமை நீதிபதி சந்திரசூட், 'சுதந்திரத்திற்குப் பிறகு, ஹிந்துவாக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் அனைவருக்கும் சமமான குடியுரிமையை அரசியல் சாசனம் உறுதி செய்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

இந்த வழக்கு விசாரணை புதன்கிழமையும் (ஜன.31) தொடர உள்ளது.